DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **ரேவதி** | Caste | : | |
| Father Name | : **பொன்னன்** | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | 19 years |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.04.2026.**

**PW - 6**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் கடலூரில் உள்ள அரசு கல்லூரியில் பி.ஏ. 2ம் ஆண்டு படிக்கிறேன். அதே கல்லூரிக்கு சொந்தமான அரசு மாணவியர் விடுதியில் தங்கியுள்ளேன். ஆஜர் எதிரி எனது தாயார் ஆவார். சாட்சி கனிஷ்கா எனது தங்கை ஆவார். எனக்கு தர்ஷினி என்ற தங்கையும் உள்ளார். என் அப்பா பொன்னன் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். எதிரியான என் அம்மா, என் அப்பா பொன்னன் இறந்த பிறகு பிரபு என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். பிரபு தான் இந்த வழக்கில் இறந்தவர். சம்பவம் நடந்த போது, என் அம்மா முசிறி, ஐயம்பாளையத்தில் உள்ள சண்முகம் என்பவரது செங்கல் சூளையில் வேலை செய்தார். பிரபுவும் அங்கு தான் வேலை செய்தார். நான் 2022-ம் வருடம் கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே உள்ள வேளங்காட்டில் உள்ள எனது அத்தை பொன்னியம்மாள் என்பவரது வீட்டில் நானும் எனது

தங்கை கனிஷ்காவும் தங்கி படித்தோம். சம்பவ காலத்தில் நான் முசிறி ஐயம்பாளையத்தில் உள்ள என் அம்மா வேலை செய்யும் செங்கல் சூளைக்கு வரவில்லை. பிரபு எப்படி இறந்தார் என்று தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். அதன் பிறகு முசிறி நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் கொடுத்து 4 ஆண்டுகள் இருக்கும். அந்த வாக்குமூலம் நீதித்துறை நடுவர் முன்பாக கொடுத்தேன். அங்கு என்ன சொன்னேன் என்று தெரியாது. இறந்தவரின் உறவினர் சொன்னதை சொன்னேன். மீண்டும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)*

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்த போது, கடந்த 2022-ம் வருடம் நானும் எனது தங்கை கனிஷ்காவும், அத்தை பொன்னியம்மாள் வீட்டில் தங்கி படித்தோம் என்றும், பள்ளிக்கு விடுமுறை விட்டதால், நாங்கள் இருவரும் கடந்த 27.08.2022 அன்று என் அம்மா வேலை செய்த ஏ.பி.எஸ்.செங்கல் சூளைக்கு வந்து தங்கினோம் என்றும், நாங்கள் இரவு செங்கல் சூளையில் உள்ள கொட்டகையில் தூங்கியபோது எனது அம்மா இயற்கை உபாதைக்கு வெளியே சென்ற போது, நானும் எனது சகோதரி கனிஷ்காவும், தூங்கிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது குடிபோதையில் வந்த எனது அம்மாவின் இரண்டாவது கணவர் பிரபு என்னை பலாத்காரம் செய்ய முயற்சித்தார் என்றும், நான் சத்தம் போட்டதால் என் அம்மா வந்து, அவரை அரிவாளால் வெட்டினார் என்றும் பின்பு, வாதாமடைக்கை கட்டையால் பிரபுவின் தலையில் அடித்தார் என்றும், அடிப்பட்ட பிரபு சிறிது நேரத்தில் இறந்துவிட்டார் என்றும், பின்பு எனது அம்மா பிரபுவின் காலை தர

தரவென இழுத்து சென்று கொட்டகைக்கு பின்புறம் உள்ள காவிரி ஆற்றில் தள்ளிவிட்டார் என்றும், சிறிது நேரத்தில் சூளையில் வேலை செய்யும் ராஜு, வந்து பிரபுவை கேட்டார் என்றும், அவரிடம் எனது அம்மா ரூ.100/- ஐ கொடுத்து அனுப்பினார் என்றும், பின்பு எங்களை எங்கள் அம்மா அழைத்துச் சென்று ஐயம்பாளையம் பஸ் ஸ்டாப்பில் பஸ் ஏற்றி எங்களை சமயபுரம் டோல்கேட்டில் நிற்க சொன்னார் என்றும், சூளை ஓனர் போன் செய்தால் அவரிடம் எனது அப்பா பிரபு சண்டை போட்டு எங்களை கொண்டு வந்து சமயபுரம் டோல்கேட்டில் விட்டு விட்டதாக சொல்ல சொன்னார் என்றும், இதை நான் போன் செய்த சூளை ஓனரிடம் சொன்னேன் என்றும், பின்பு ஓனர் வண்டியை அனுப்பி அதில் ராஜுவும் எனது அம்மாவும் வந்து எங்களை அழைத்துச் சென்றார்கள் என்றும், பின்பு இரண்டு நாட்கள் கழித்து, வேளங்காட்டிற்கு சென்றுவிட்டனர் என்றும், 03.01.2023 அன்று பிரபுவின் தந்தை ஆறுமுகம் வந்து, பிரபுவை பற்றி விசாரித்த போது, எனது அம்மா நடந்ததை சொன்னார் என்றும், பின்பு ஆறுமுகம் அந்த தகவலை போலீசாரிடம் சொன்னார் என்றும், இது குறித்து கடந்த 12.01.2023 அன்று முசிறி நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மனை பெற்று நீதிமன்றம் சென்று நீதிபதி முன்பு மேற்படி சம்பவத்தை வாக்குமூலமாக சொன்னேன் என்றும், எதிரி எனது தாயார் என்பதால் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.